**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.163/2019**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இருதயமேரி | ஜாதி | : | |
| க.பெ | : | சேசுராஜ் | தொழில் | : | வயது முதிர்வின் காரணமாக வேலைக்கு செல்லவில்லை |
| கிராமம் | : | வீரக்கல் மேட்டுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 81/2025 |
| தேதி | : | 11.02.2026 | | | |

**10வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மரியசூசை 10ஆம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்த போது பட்டா எண்.676 ஆனது 1ம் பிரதிவாதி மரியசூசை பெயரில் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.3 உள்ள வீட்டில் மரியசூசை பெயரில் தான் வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு முன்பு வரை வீட்டுவரி இருந்து வந்தது என்றால் சரிதான். மரியசூசை பெரியல் 12 முதல் 15 வருடங்களாக வீட்டுவரி மற்றும் பட்டா இருந்தது என்றால் சரிதான். மரியசூசை பெயரில் இருந்த வீட்டுவரி ரசீது மற்றும் பட்டா ஆகியவற்றை நீங்களும், உங்கள் உடன்பிறந்தவர்களும் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை, ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா எண்.676 ஆனது 1ம் பிரதிவாதி மரியசூசை பெயரில் தான் இருந்தது என்று வழக்குரையிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

10ம் பிரதிவாதி பெயரில் கிரையம் கொடுக்கப்பட்ட பிறகு 2010 ல் கன்னியாஸ்திரியர்கள் தங்கும் இல்லம் கட்டப்பட்டு திறப்பு விழா நடந்தது என்றால் சரிதான். அந்த திறப்பு விழாவில் 1 முதல் 8 பிரதிவாதிகள் கலந்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் யாரும் கலந்துகொள்ளவில்லை. கட்டடம் கட்ட ஆரம்பிக்கும் போது நீங்கள் எதுவும் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்

சரிதான். தாவா சொத்திற்கு அருகில் தான் நீங்கள் குடியிருந்தீர்கள் என்றால் ஆரம்பத்தில் குடியிருந்தோம். தாவா சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றும், எவ்வாறு அனுபவித்து வருகிறார்கள் என்று ஊர் தலைவருக்கு தெரியும் என்றால் சரிதான். ஊர்த்தலைவர் ஜோசப் என்றால் எனக்கு தெரியாது.

கிரையம் எழுதிக்கொடுத்த பிறகு 10 ம் பிரதிவாதி பெயரில் மாறிவிட்டது என்றால் சரிதான். 2014 ல் தான் நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். எனவே உங்கள் வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணப்படி சின்னப்பன் குமாரர் அருளப்பன், பால்ராஜ் ஆகியோர்களுக்கு சர்வே எண்.116/1B கட்டுப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி சொத்துக்கள் சின்னப்பன் குமாரர் அருளப்பன், பால்ராஜ் ஆகியோர்களுக்கு மற்றும் தாவா சொத்து கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

சர்வே எண்.116/1B ல் கட்டுப்பட்ட சொத்துக்களை அருளப்பன், பால்ராஜ் ஆகியோர் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எத்தனை வருடங்களுக்கு முன்பு மேற்சொன்ன பாகப்பிரிவினை ஏற்பட்டு தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் 15 வருடம் இருக்கும். அதேபோல தான் தாவா சொத்தும் 1ம் பிரதிவாதி மரியசூசைக்கு வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் பிரிக்கப்பட்டு அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். சொத்து பிரிக்கப்பட்டது. அதனால் தான் 1ம் பிரதிவாதி மரியசூசை வா.சா.ஆ.3 ஐ எழுதிக்கொடுக்கும்போது தனக்கு வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் கிடைத்தது என்று கூறியுள்ளார் என்றால் சரிதான்.

2, 3 பிரதிவாதிகளான ஆரோக்கியம்மாள், அந்தோணி ஆகியோர் பருவ வயதிற்கு பிறகு கன்னியாஸ்திரியர்களாக ஆகிவிட்டடார்கள் என்றால் சரிதான். மரியசூசை தாவா சொத்தில் உள்ள ஓட்டு வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டோடு சேர்த்து பக்கத்தில் உள்ள காலி இடத்தையும் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மரியசூசை உங்கள் மீதும், இதர

பிரதிவாதிகள் மீதும் அசல் வழக்கு எண்.25/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. மேற்படி வழக்கில் நீங்கள் தரப்பினராக உள்ளீர்கள் என்றும், அந்த வழக்கில் வழக்கறிஞர் வைத்து ஆஜராகி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் வா.சா.ஆ-3 ஆவணத்தை பொறுத்து குறிப்பிட்டு சொல்லியிருந்தும் அதை ரத்து செய்ய எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

சர்வே எண்.68/17 ல் வீட்டில் 1ம் பிரதிவாதி இருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் 1ம் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார் என்று உங்களது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.116/1D ல் உள்ள கூரை வீட்டில் யார் இருந்து வருகிறார் என்றால் என் அண்ணன் மரியசூசை இருந்து வருகிறார். தொகை வாங்க வேண்டும் என்ற நோக்கிலும், இந்த வழக்கை சுத்தமான கரங்களுடன் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருவாய்த்துறையினர் சரியான முறையில் தான் மரியசூசை பெயரில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாய்மொழி பாக்பிரிவிணை படி அவர் அவர்களுக்கு அதன்படி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உங்கள் வழக்கில் உண்மை தன்மை இல்லாததால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor